### வேளாண்துறையில் திராவிட மாடல் அரசு தொடர்ந்து சாதனை!

# உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் அன்புமணி அறிக்கை விடுவதா?

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆதாரங்களுடன் அறிக்கை!

சென்னை, ஜன.15-

உழவர்கள் நெஞ்சத்தில் மகிழ்ச்சி பொங்குகிறதா? என்ற கேள்வியுடன் ஒரு விளம்பரம் தேடும் உண்மைக்கு புறம்பான அறிக்கையை வெளியிட்டுள்ள சொந்த கட்சியிலிருந்து அடித்து விரட்டப்பட்ட அன்புமணி அவர்கள் பொய்யைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவர். பழைய அறிக்கைகளை தொகுத்து ஒன்றும் தெரியாமல், விவரம் அறியாமல் அன்றாடம் அறிக்கை விடுவதும், நகர வாழ்க்கையில் வாழ்ந்துக் கொண்டு விவசாயத்தின் அருமை, பெருமைகள் தெரியாமல், வயல்வெளியில் நடக்காமல், வயலில் அண்டைவெட்டுவது என்னவென்று தெரியாமல் அவர் வீட்டு ஜன்னலில் இருந்து கடற்கரையில் டால்பின்கள் விளையாட்டை கண்டு மகிழ்ந்து அறிக்கைவிடும் "டால்பின் அன்புமணி" அவர்களுக்கு விவசாயிகளின் துயர் என்னவென்று ஒன்றும் தெரியாதவர்.

**எடப்பாடியின் ஊதுகுழல்!**

தைத்திங்கள் தமிழர்திருநாளாம் பொங்கல் அன்று இந்த உலகத்தை காத்தருளும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக விவசாய பெருங்குடி மக்கள், நேற்றைய தினம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விவசாய சங்கங்களின் தலைவர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு திராவிட மாடல் நல்லாட்சி நடத்தும் திராவிட மாடல் சூரியனான முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியினால் வேளாண்மைக்கென பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வரும் அவர்களுக்கு நன்றி பெருக்கோடு தங்களுடைய நன்றியினையும், பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்ந்தனர். அதேபோல வரும் சட்டமன்ற தேர்தலிலும் உதய சூரியனுக்கு நிச்சயம் நன்றி பாராட்டுவர் வேளாண் பெருங்குடி மக்கள் என்பது உண்மை.

இந்த சிறப்பான நிகழ்வை பொறுத்துக் கொள்ள இயலாமல் ஒவ்வொரு முறையும் விவசாய சங்கத் தலைவர்கள் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டும் போதெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாமல் ஒவ்வொரு முறையும் தான் சேர்ந்திருக்கும் புதிய கூட்டணியின் எஜமானர்களை திருப்திபடுத்தும் நோக்குடன் வெற்று அறிக்கை அன்புமணி தனது கூட்டணி விசுவாசத்தை காட்டிட, தமிழ்நாடு மக்களை குழப்பும் விதமாக, எடப்பாடியின் ஊதுகுழலாக இருந்து கொண்டு இவ்வரசை குறை சொல்வதையே நோக்கமாக கொண்டு குழப்பமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

திமுக-வின் ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியில் விளைநிலங்கள் செழித்து, அதற்குரிய பலன்களும் அதிகமாகியிருக்கிறது என்பதுதான் உண்மை. 2023-24 மற்றும் 2024-25ஆம் ஆண்டுகளில் அதிக வடகிழக்கு பருவமழை, தென்மேற்கு பருவமழை பற்றாக்குறை, வறட்சி, பருவம் தவறி பெய்த கனமழை, மிக்சாம் புயல், ஆலங்கட்டி மழை, சூரைக்காற்று போன்ற பல்வேறு இயற்கை இடர்பாடுகளால் 20 இலட்சம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்கள் பாதிப்படைந்த போதிலும் 2023-24ஆம் ஆண்டில், 109.51 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் 2024-25ஆம் ஆண்டில், 110.04 மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடையப்பட்டது. அதேபோல சாகுபடி பரப்பும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், டால்பின் அன்புமணி தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சி குறித்து, சிறிதும் புரிதல் இல்லாமல் தவறான தகவல்களை சமீபகாலங்களில் வெளியிட்டு வருகிறார்.

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச்செயலாக்க அமைச்சகத்தின் தரவுகளின் அடிப்படையில், வேளாண்மையில்



2012-13 முதல் 2020-21வரை சராசரியாக 1.36 சதவீதமாக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSVA), 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 3.03 சதவீதமாக உயர்ந்துள்ளது. அடிப்படை ஆண்டான (Base Year) 2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில்2024-25 ஆம் ஆண்டில் வேளாண்மையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி 9.97 சதவீதம் உயர்ந்துள்ளது. அதாவது ரூபாய் மதிப்பில் 2011-12ஆம் ஆண்டில், ரூ.53,75,639 இலட்சம் ஆக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி. 2024-25ஆம் ஆண்டில் ரூ.59,11,708 இலட்சம் ஆக உயர்ந்துள்ளது.

2012-13 முதல் 2020-21 வரை சராசரியாக 1.13 சதவீதமாக இருந்த நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி (NSVA), 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 2.74 சதவீதமாக உயர்ந்துள்ளது. அடிப்படை ஆண்டான (Base Year) 2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024-25 ஆம் ஆண்டில் வேளாண்மையில் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி 3.09 சதவீதம் உயர்ந்துள்ளது. அதாவது ரூபாய் மதிப்பில் 2011-12ஆம் ஆண்டில், ரூ.50,31,026 இலட்சம் ஆக இருந்த நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி. 2024-25ஆம் ஆண்டில் ரூ.51,86,276 இலட்சம் ஆக உயர்ந்துள்ளது. இந்த விவரங்கள் யாவும் இவர் கூட்டணி சேர்ந்திருக்கும் ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளி விவரங்களே என்பது உண்மை.

**எடப்பாடியின் மோசமான ஆட்சி!**

இந்த புள்ளி விவரங்களை பார்க்கும் போது, இவர் தற்போது கூட்டு சேர்ந்திருக்கும் புதிய கூட்டணியின் எடப்பாடியின் கடந்த கால ஆட்சிதான் மோசமான ஆட்சியாகும். அந்த 10 ஆண்டு இருண்டகால ஆட்சியை நடத்திய எடப்பாடியின் ஆட்சியில் தான் வேளாண் உற்பத்தி குறைந்து காணப்பட்டது என்பது தெளிவாகும்.

திமுக ஆட்சியில் ஐந்தாண்டு காலத்தில் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.81 மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்ற பொய்யான விவரத்தை தெரிவித்துள்ளார் வெற்றறிக்கை அன்புமணி.

**நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை**

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ஒவ்வொரு ஆண்டும் ஒன்றிய அரசின் வேளாண் விலை மற்றும் செலவு ஆணையத்தால் நிர்ணயிக்கப்படு கிறது. ஆண்டுதோறும் மாநில அரசு நெல் சாகுபடிக்கு ஆகும் செலவினத்தை கணக்கிட்டு குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி வழங்க பல்வேறு கோரிக்கைகள் வைத்தும் இவர் அங்கம் வகிக்கும் பாஜக அரசிடம் கேட்டு அதிக ஆதரவுவிலையை பெற்றுத் தர முடியாவிட்டால் இவர் இந்த கூட்டணியில் இருந்தே வெளியேற தயாராக இருக்கிறரா என்பதை இவர் தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறு இல்லாமல், ஒன்றிய அரசின் எந்த வித சரியான நிதி பங்களிப்பு இம்மாநிலத்திற்கு வழங்காத நிலையிலும் 2020-21 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் நெல் சாதாரண ரகத்திற்கு 1,868 ரூபாயாக இருந்த ஆதரவு விலையை ஒன்றிய அரசு 2025-26ஆம் ஆண்டில் 2,369 ரூபாயாக நிர்ணயித்துள்ளது. இது வெறும் 27 சதவீத உயர்வு மட்டுமே ஆகும். மேலும், நெல் சன்ன ரகத்திற்கு 1,888 ரூபாயாக இருந்த ஆதரவு விலையை ஒன்றிய அரசு 2025-2026 ஆம் ஆண்டில் 2,389 ரூபாயாக ஆக நிர்ணயித்துள்ளது. இதுவும் வெறும் 27 சதவீத உயர்வு மட்டுமே. இதை எதிர்த்து கேட்க தெம்பும், திராணியும் இல்லாத இவர், இவ்வரசை குறை சொல்வது எந்த விதத்தில் நியாயம். ஆனால் விவசாயிகளுக்கு வாழ்வாதாரத்தை பெருக்கிட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ்நாடு அரசு கடந்த காலத்தில் சன்ன ரகத்திற்கு 70 ரூபாயாக இருந்த ஊக்கத் தொகையை 156 ரூபாயாக ஆக உயர்த்தி தற்போது வழங்கியுள்ளது. இது 123 சதவீத உயர்வாகும். மேலும், இவ்வரசு, சாதாரண ரக நெல்லுக்கு 50 ரூபாயாக இருந்த ஊக்கத்தொகையை 131 ரூபாயாக உயர்த்தி வழங்கியுள்ளது. இது 162 சதவீத உயர்வாகும். இந்த விவரத்தை தமிழ்நாட்டு விவசாயிகளிடமிருந்து இவர் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

**இயற்கைப் பேரிடர் நிவாரணம்.**

கடந்த 2011 முதல் 2021 வரை நடந்த அதிமுக ஆட்சியில் தமிழ்நாட்டு விவசாயிகள் இடர்பாடுடனே தங்களது வாழ்க்கையினை சிரமத்துடன் நடத்தி வந்தனர். அதிமுக ஆட்சியில் போராட்ட வாழ்க்கையுடன் அதிகளவில் விவசாயிகளின் தற்கொலைகளும் நிகழ்ந்தது. இதுபற்றி ஒன்றும் அறியாத வெற்று அறிக்கை அன்புமணி அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் (2021-22 முதல் 2024-25 வரை) இயற்கை பேரிடர்களால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களில் 13.29 இலட்சம் பரப்பில் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு ரூ.1,631.53 கோடி நிவாரணத் தொகையாக 20.84 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2024 ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையினால் பாதிப்பு, 2025ல் ஜனவரி மாதத்தில் பருவம் தவறி பெய்த கனமழையால் பாதிப்பு என 2.29 இலட்சம் எக்டரில் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு ரூ.289.63 கோடி நிவாரணம் வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டுவிட்டது.

2025-26ஆம் ஆண்டில், வடகிழக்கு பருவமழை 2025 & டித்வா புயலால் 56,226 எக்டரில் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.111.96 கோடி நிவாரணம் வழங்குவதற்கான ஆணை இன்றே பிறப்பிக்கப்பட்டு, விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரையில் ஏற்பட்ட அனைத்து இயற்கை இடர்பாடுகளுக்கும், திராவிட மாடல் நாயகன் பாதிப்பு ஏற்பட்ட உடனே நேரடியாக களத்திற்கு சென்று பாதிக்கப்பட்டவர்களின் துயரத்தினை அறிந்து, அவ்வப்போது நடவடிக்கை எடுக்கும் இவ்வரசினை குற்றம் சுமத்துவது சரியல்ல. அதேபோல், அவரின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வாறு கற்பனையும், ஃபேண்டசியும் கலந்து டால்பின் அன்புமணிக்கு என்னவென்று தெரியாமல் தவறான அறிக்கையினை எழுதிகொடுக்கும் எஜமானர்களை திருப்திபடுத்துவதுதான் இவருடைய வாடிக்கையாக உள்ளது. இனிவருங் காலங்களில் உண்மையினை ஆராய்ந்து அறிக்கை விடுவது இவருக்கும் நல்லது, இவர் வகிக்கும் கூட்ட ணிக்கும் நல்லது.

இவ்வாறு எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



அ.தி.மு.க. ஓ.பி.எஸ். அணியில் மாநில அமைப்புச் செயலாளரும் தமிழக காங்கிரஸின் மாநில துணைத்தலைவராகவும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினராகவும் எம்.எல்.சி.யாகவும் இருந்த வெங்கடாசலத் தேவர் அவர்களது பேரனும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி. வி. ராஜேந்திரன் அவர்களது அண்ணன் மகனும் வேதாரண்யம் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் பி.வி. குழந்தைவேலு அவர்களது மகனுமாகிய பி.வி.கே. பிரபு திருச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். உடன் அமைச்சர்

### திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க கலை நிகழ்ச்சிகள்!

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் திராவிட பொங்கல் விழா!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

*குமரி, ஜன. 18 -*

*கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் உழவர் திருநாள் - காணும் பொங்கல் - கலை இலக்கியத்தின் வாயிலாக "திராவிடப் பொங்கல்" நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் கழகத் தலைவர் . தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க கலை நிகழ்ச்சிகள் ! கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது !*

*கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் . தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுரையின்படி, தமிழர் திருநாளாம் சமூக நீதிக்கான திராவிடப் பொங்கல் விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 16.01.2026, வெள்ளிக்கிழமை அன்று நாகர்கோவில், அண்ணா விளையாட்டு அரங்கம் அருகில் உழவர் திருநாள், காணும் பொங்கல், கலை இலக்கியத்தின் வாயிலாக "திராவிடப் பொங்கல்" கொண்டாட்டம் கலை நிகழ்ச்சிகள் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது.*

*இதில் கழகத் தலைவர். தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் சாதனைகளை நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகள் வாயிலாகவும், சிறப்பு திரை அமைத்தும் ஒளிபரப்பப் பட்டது.*






*நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி. J. ஹெலன் டேவிட்சன் Ex.MP., மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லை செல்வம், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கிராமிய கலைஞர்கள், கிராமிய பாடகர்கள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*

### ஒன்றிய அரசு எத்தனை நெருக்கடி கொடுத்தாலும், தூசி போல தட்டி விட்டு, துணிச்சலுடன்

# பிற மாநில முதல்வர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

*சென்னை, ஜன. 18 -*

*ஒன்றிய அரசு எத்தனை நெருக்கடி கொடுத்தாலும் தூசி போல தட்டி விட்டு பாரபட்சமான நடவடிக்கைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு பிற மாநில முதல்வர்களுக்கு எடுத்துக் காட்டாக தமிழக முதல்வர் மு,க,ஸ்டாலின் அவர்கள் விளங்குகிறார் என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.*



தினகரன்

ஜனவரி 17, 2026 சனிக்கிழமை

**தொடரும் துணிச்சல்...!**

திருவள்ளுவர் தினத்தையொட்டி, தமிழ்நாட்டு மக்களுக்கு 4 வாக்குறுதிகளை அளித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். சமூக அநீதி மற்றும் மதவாத சக்திகளுக்கு எதிராக போராடும் துணிச்சல் தொடரும் என்பது உள்ளிட்ட 4 வாக்குறுதிகளை தருவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெளிவுபடுத்தியுள்ளார்.

தை முதல் நாள் பொங்கல் பண்டிகை நேற்று முன்தினம் தமிழர் திருநாளாக உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. மறுநாள் உழவுக்கு உதவிசெய்த மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக நேற்று மாட்டுப்பொங்கல் கொண்டாடப்பட்டது. மனிதன் அறநெறி கொண்டு வாழவேண்டும் என்று வாழ்க்கைக்கு தேவையான கருத்துகளை ஈரடி குறளில் சொல்லி, முப்பால் தந்து நல்வழிப்படுத்திய திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக 'திருவள்ளுவர் தினம்' நேற்று அனுசரிக்கப்பட்டது. இந்நிலையில்,

*அது வருமாறு:-*

*திருவள்ளுவர் தினத்தையொட்டி, தமிழ்நாட்டு மக்களுக்கு 4 வாக்குறுதிகளை அளித்துள்ளார் முதல்வர் மு.க.ஸ்டாலின். சமூக அநீதி மற்றும் மதவாத சக்திகளுக்கு எதிராக போராடும் துணிச்சல் தொடரும் என்பது உள்ளிட்ட 4 வாக்குறுதிகளை தருவதாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.*

*தை முதல் நாள் பொங்கல் பண்டிகை நேற்று முன்தினம் தமிழர் திருநாளாக உலகம் முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. மறுநாள் உழவுக்கு உதவிசெய்த மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக நேற்று மாட்டுப்பொங்கல் கொண்டாடப்பட்டது. மனிதன் அறநெறி கொண்டு வாழவேண்டும் என்று வாழ்க்கைக்கு தேவையான கருத்துகளை ஈரடி குறளில் சொல்லி, முப்பால் தந்து நல்வழிப்படுத்திய திருவள்ளுவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக 'திருவள்ளுவர் தினம்' நேற்று அனுசரிக்கப்பட்டது. இந்நிலையில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளுவர் தினத்தையொட்டி தமிழக மக்களுக்கு 4 வாக்குறுதிகளை அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "அஞ்சாமை மனிதநேயம் அறிவாற்றல் ஊக்கமளித்தல் என வள்ளுவன் சொன்ன இவை நான்கும் நமது ஆட்சியின் அடிநாதம்" என குறிப்பிட்டுள்ளார்.*

*""சமூக அநீதி மற்றும் மதவாத சக்திகளுக்கு எதிராக போராடும் துணிச்சல், வறியோர் எளியோர் வாழ்வுயர மனிதநேய திட்டங்கள், இளைய சமூகத்தின் அறிவாற்றலை வளர்க்கும் முன்னெடுப்புகள், தொழில் வளர்ச்சிக்கும், மகளிர் மேம்பாட்டுக்கும் ஊக்கமளிக்கும் ஆக்கப்பணிகள் என இவை நான்கும் தமிழ்நாட்டில் தொடரும் என்பது இந்த திருவள்ளுவர் தினத்தில் உங்களுக்கு நான் தரும் வாக்குறுதி" என தனது நிலைப்பாட்டை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளார்.*

*தமிழகத்தில் அடுத்த சில மாதங்களில் சட்டப் பேரவை பொதுத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில், "அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க் கியல்பு" என்னும் அசத்தலான இந்த திருக்குறளை மேற்கோள் காட்டி, 4வாக்குறுதி களை தமிழக மக்களுக்கு அளித்துள்ளார். இது, தி.மு.க. தொண்டர்களை மட்டுமின்றி, ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் உற்சாகப்படுத்தியுள்ளது.*

*ஒன்றிய அரசின் MGNREGS போன்ற திட்டங்களில் நிதிச்சுமையை மாநிலங்கள் மீது சுமத்துவதையும், நிதி ஒதுக்குவதிலும் பாரபட்சம் காட்டுவதையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாக விமர்சித்து வருகிறார். கவர்னரை வைத்து மாநில அரசின் உரிமையை முடக்க நினைக்கும் ஒன்றிய அரசின் செயல்பாடுகளை சட்டரீதியாகவும் எதிர்கொண்டு வருகிறார். வலிமையான தேசத்திற்கு மாநிலங்களே அடித்தளம் என்பதை வலியுறுத்தும் வகையில், "ஒன்றிய அரசு" என்ற வார்த்தையை அழுத்தமாக பேசி, மாநில உரிமைகளுக்காக போராடி வருகிறார். ஒன்றிய அரசின் அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் மிக தைரியமாக எதிர்த்து போராடி வருகிறார்.*

*ஒன்றிய அரசின் மக்கள் விரோத செயல்பாடுகளை நேருக்கு நேராக எதிர்த்து, குரல் கொடுக்கிறார். சுருக்கமாக, ஒன்றிய அரசின் அடக்குமுறைகளை மீறி, மாநில உரிமைகளை பாதுகாக்கவும், மாநிலங்களின் அதிகாரத்தை பாதுகாக்கவும் தளபதியாக முன்நிற்கிறார். ஒன்றிய பா.ஜ. அரசின் பாரபட்சமான நடவடிக்கைகளை துணிச்சலுடன் எதிர்கொண்டு பிற மாநில முதல்வர்களுக்கு எடுத்துக்காட்டாக உள்ளார்.*

*எத்தனை நெருக்கடி கொடுத்தாலும், அதை தூசி போல் தட்டிவிட்டு, தனது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்காமல் பயணிக்கிறார். இதை, ஒன்றே முக்கால் அடி திருக்குறள் மூலம், சேர வேண்டியவர்களுக்கு கொண்டுபோய் சேர்த்துள்ளார்.*

*இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ச. சுப்பையா**

**சனவரி 16 (1980)**



**சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் 1971 மற்றும் 1977 ஆகிய இரண்டு முறை கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, கழகப் பணியாற்றியவர்.**

**சங்கரன்கோவில் நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர கூட்டுறவு வீட்டு வசதி சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**"எந்த நிலையிலும் நிலை குலையாத – நெருக்கடி காலத்திலும் (மிசா) நிலைமாறாத தம்பிதான் பண்பாளர் ச.சுப்பையா" என தலைவர் கலைஞர் அவர்கள், அவரது இரங்கல் கூட்டத்தில் குறிப்பிட்டார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**